மாலை முரசு

பக்கங்கள் 19+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | தை 15 வியாழக்கிழமை 29.01.2026 | அதிர்வு 183

## நாமலுக்கு எதிரான வழக்கு விசாரணை வரும் ஜூலையில்



பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான முறைப்பாட்டின் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## மட்டக்களப்பில் மின்சாரம் தாக்கி இருவர் சாவு!

மட்டக்களப்பு, ஏறாவூர்பற்று பிரதேசத் துக்குட்பட்ட பன்குடாவெளி புலையவெளியில் இன்று காலை யானை வேலி மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர் என்று கரடியானாறு பொலிஸார் தெரிவித்தனர்.

பன்குடாவெளி புலையவெளியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான செல்வம் கர்ணன் (வயது 48) மற்றும் ஏறாவூர் 5ஆம் குறிச்சி வெற்றிவேல் வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான தமிழ்ச்செல்வி 02

### கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக

# நெடுங்கேணியில் சகல மாவட்ட மக்களும் ஒன்றுதிரள வேண்டும்!

### தமிழரசின் செயலர் சுமந்திரன் அழைப்பு



அரசின் கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை நெடுங்கேணியில் நடைபெறவுள்ள மாபெரும் போராட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் வாழும் மக்கள் திரளாக வந்து பங்கேற்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். 03





# பளையில் கோர விபத்து! பெண் ஒருவர் மரணம்!!

(மரியசீலன் திலைக்ஸ்)

பளையில் இன்று இடம்பெற்ற கோர விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் சோரன்பற்று பகுதியைச் சேர்ந்த குமாரசாமி செல்வவதி என்கின்ற 63 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பளை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும், பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று 02



# அருட்சகோதரர் மீது தாக்குதல்: ஆறு அதிகாரிகளுக்கும் பிணை

கத்தோலிக்க அருட்சகோதரர் ஒருவரைத் தாக்கிய சம்பவத்தில் கைது செய்யப்பட்டிருந்த 6 பொலிஸ் அதிகாரிகளும் இன்று கம்பஹா நீதவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அறுவரும் தலா ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி அதிகாரிகளுக்கு வெளிநாடுகளுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களது பணி இடைநீக்கமும் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்களுள் அடையாளம் காணப்பட்ட மூன்று அதிகாரிகளுள் ஒருவரே தன்னைத் தாக்கினார் என்றும், ஏனைய இருவரும் அத்தருணத்தில் அருகில் நின்றவர்கள் எனவும் அருட்சகோதரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வகுமார் (வயது 43) ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர் என்று அவர்களது உறவினர்கள் அடையாளம் காண்பித்துள்ளனர்

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, தமிழ்ச்செல்வி செல்வகுமார் மற்றும் உயிரிழந்தவரது மனைவியான ஆறுமுகம் மணியம்மா ஆகியோர் காலை மீன் வாங்குவதற்காக புலையவெளி ஆற்றுக்குச் செல்லும் வேளையில் பள்ளத்துவட்டை வயல் பகுதியில் நிலமட்டத்தில் இருந்த யானை வேலி கம்பியிலிருந்து வந்த மின்சாரம் தாக்கியுள்ளது.

மின்சார அதிர்ச்சியில் தமிழ்ச்செல்வி செல்வகுமார் நீர் உள்ள பகுதியிலும் இறந்தவரது மனைவி மேட்டு நிலப் பகுதியிலும் வீழ்ந்துள்ளனர். நீரில் வீழ்ந்தவரை காப்பாற்றுமாறு ஆறுமுகம் மணியம்மா ஆற்றங்கரையில் நின்ற தனது கணவரை அழைத்துள்ளார்.

தமிழ்ச்செல்வி செல்வகுமாரை நீருக்குள் இயங்கி செல்வம் கர்ணன் காப்பாற்ற முயற்சித்தபோது அவரையும் மின்சாரம் தாகியுள்ளது.

உடனடியாக அயலவர்கள் மின்சார வேலிக்கு வழங்கப்பட்ட மின்சாரத்தைத் துண்டித்து இருவரையும் ஓட்டோவில் வைத்தியசாலைக்கு கொண்டுவரும் வழியில் உயிழந்துள்ளனர்.

சடலங்கள் செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கரடியனாறு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## நாமலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த விசாரணையை எதிர்வரும் ஜூலை 30ஆம் திகதி நடத்த கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணை கொழும்பு தலைமை நீதிபதி முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

இன்றைய விசாரணைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் மற்றும் மேலும் மூன்று சந்தேகநபர்களும் ஆஜராகியிருந்தனர்

விசாரணையின்போது, வழக்குத் தொடர்பான சட்ட ஆலோசனை இன்னும் பெறப்படவில்லை எனக் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தினர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்ததையடுத்தே, விசாரணை எதிர்வரும் ஜூலை 30ஆம் திகதிக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த நீதிமன்ற விசாரணைக்குள் சட்ட ஆலோசனையின் நிலை குறித்து நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.





## பளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணே உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனத்தின் ஓட்டுநர் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### இராணுவம் வெளியேறிய

# பண்டத்தரிப்புக் காணியில் பொருளாதாரத் திட்டங்கள்!

### தவிசாளர் ஜெசீதன் தெரிவிப்பு

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்து நேற்று விடுவிக்கப்பட்ட பண்டத்தரிப்புக் காணியில், மிகச்சிறந்த பொருளாதாரத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று வலி.தென்மேற்கு சபையின் தவிசாளர் ஜெசீதன் தெரிவித்தார்.

இந்தக் காணி விடுவிப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எமது சபைக்கு பெரும் வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய காணியையே இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருந்தனர். இந்த விடயங்களை எடுத்துக்கூறி, அண்மையில் இராணுவத்தினருடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

காணிக்கான ஆவணங்களின் நிழற்பிரதியை எம்மிடத் இருந்து பெற்றுக்கொண்டனர். இரு வாரங்களுக்குள் ஒரு முடிவை அறிவிப்போம் என்றனர். அதுபோல் தற்போது அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.



அந்தக் காணியின் ஒரு பகுதியிலேயே எமது சபையின் கொல்களம் உள்ளது. அது இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காரணத்தால், தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள கொல்களம் ஒன்றுக்கு வாடகை செலுத்த வேண்டிய நிலைமை எமக்கு ஏற்பட்டிருந்தது. தற்போது எமக்கு கொல்களம் ஒன்று தேவையாக உள்ள நிலையில், அதை அங்கு மீள இயக்குவது தொடர்பில் சிந்திக்கின்றோம். எனினும், குறித்த வட்டார உறுப்பினர்களினதும், மக்களினதும் கருத்துக்களைப் பெற வேண்டியுள்ளது.

அத்துடன் தற்போது விடுவிக்கப்பட்ட காணி, பரந்து விரிந்த காணியாகும். அங்கு பல்வேறு பொருளாதாரத் திட்டங்களையும் செயற்படுத்த முடியும். எனவே, சபைக்கு மிகச்சிறந்த பொருளா தாரத்தைத் தரக்கூடிய வகையில் அந்தக் காணியை மாற்றியமைப்போம்.” - என்றார்.

# கச்சதீவு திருவிழா ஏற்பாடு: ஆராய்ந்தது விசேட குழு!

கச்சதீவு பெருவிழாவுக்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வரும் நிலையில், விசேட குழுவொன்று நேற்றுக் கச்சதீவுக்குப் பயணம் மேற்கொண்டு ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கடற்படையினர் தற்போது முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறான நிலையிலேயே, இந்தப் பணிகளை விசேட குழுவொன்று நேற்று நேரில் ஆய்வு செய்துள்ளது.

நெடுந்தீவுப் பங்குத்தந்தையும், கச்சதீவு ஆலயப் பரிபாலகருமான அருட்தந்தை பி.பத்திநாதன் அடிகளார், நெடுந்தீவு பிரதேசசெயலர் பிரபாகரன், நெடுந்தீவு பிரதேசசபை தவிசாளர் சங்கரப்பிள்ளை சத்தியவரதன், யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்படை அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட குழுவே இந்த ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளது.

# பரு. தும்பளை, நெல்லண்டை அம்மன் ஆலய கும்பாபிஷேகம் நாளை காலை

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தும்பளை, நெல்லண்டை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்டபத்தன கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 07.30 மணி தொடக்கம் 08.06 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கர்மாரம்பம் கடந்த புதன்கிழமை காலை 07.35 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை காலை 08 மணி முதல் மாலை 3 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தினர்.

கோயிலின் பரம்பரைக் குருக்களும் ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமான “சிவகாம கிரியாமணி தேவிபூஜா துரந்தர்” சிவஸ்ரீ சோமஸ்கந்த தனஞ்சய குருக்கள் பிரதமகுருவாக இருந்து கும்பாபிசேகத்தை நடத்தி வைத்தனர்.

## நெடுங்கேணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் இன்று கருத்துத் தெரிவிக்கையில்,

”கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிரான மாபெரும் போராட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை நெடுங்கேணியில் நடைபெறும். இதில் சகல மாவட்டங்களிலும் வாழும் மக்கள் திரளாக வந்து பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்தப் போராட்டத்துக்கு எமது முழுமையான ஆதரவை வழங்குவதோடு எமது பங்களிப்பையும் தொடர்ச்சியாக வழங்குவோம்.” - என்றார்.

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக நாளை ஞானச்சுடர் மலர் வெளியீடு

சைவகலை பண்பாட்டுப் பேரவையின், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாத னைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், தை மாத 337 ஆவது ஞானச்சுடர் மலர் வெளியிட்டு வைக்ப்படவுள்ளது

நாளை வெள்ளிக்கிழமை இடம்பெற வுள்ள இந்த நிகழ்வில்

வெளியீட்டுரையை சைவப்புலவர் க.தேவமனோகரனும், மதிப்பீட்டுரையை தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலனும் நிகழ்த் தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிக ளும் வழங்கப்படவுள்ளன.





Digital Media Partner முரசு



# கிழக்கு மாகாண அம்மன் மகளிர் இல்லத்துக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கற்றல் உபகரணம்

அம்பாறை – அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலக பிரிவில் உள்ள, கோலாவில் பிரதேசத்தில் அமைந்துள்ள அம்மன் மகளிர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வரும் 42 பெண் பிள்ளைகளுக்கு 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பிள்ளைகளின் ஏனைய தேவைகளுக்காக 50 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இவற்றை வழங்கி வைத்தார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புகைப்பதைக் குறைத்தல்

பக்கெட்டுகளை உடைத்து சிகரெட்டுகளை தனித்தனியாக விற்பனை செய்வதைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து ஒரு புதிய விவாதம் எழுந்துள்ளது.

சுகாதாரம், ஊடகங்கள் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் தொடர்பான அமைச்சுகளின் துறைசார் மேற்பார்வைக் குழுவின் சமீபத்திய கூட்டத்தின் போது புகையிலை மற்றும் மதுபான தேசிய அதிகார சபையின் அதிகாரிகள் இதை எடுத்துரைத்திருக்கின்றனர்.

உலகளவில் 104 நாடுகள் தனித்தனியாக சிகரெட்டுகளை விற்பனை செய்வதைத் தடை செய்துள்ளன. இலங்கையிலும் இதே போன்ற சட்டம் முக்கியமானது என்றும் அதிகார சபையின் அதிகாரிகள் அங்கு வலியுறுத்தியிருக்கின்றனர்.

சிகரெட் பாவனையால் ஏற்படும் தீங்குகள் குறித்து அதன் பக்கெட்டுகளில் குறிப்பிட வேண்டும் என்பது சட்ட ஏற்பாடு. பக்கெட்டுகளில் இருந்து உடைத்துத் தனித்தனியாக சிகரெட்டுகள் விற்கப்படும்போது, பக்கெட்டுகளில் காட்டப்படும் சுகாதார எச்சரிக்கைகள் நுகர்வோருக்குத் தெரியாது என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினர்.

புகையிலை மற்றும் மது அருந்துவதால் ஆண்டுதோறும் சுமார் 22,000 பேர் - அதாவது தினசரி அறுபது பேர் - இறக்கின்றனர் என்றும், இதனால் நாடு ஆண்டுக்கு 225 முதல் 240 பில்லியன் ரூபா பொருளாதார இழப்பை சந்திப்பதாகவும் அதிகாரசபை அதிகாரிகள் அமைச்சு மேற்பார்வைக் குழுவிடம் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையை திறம்பட நிவர்த்தி செய்ய தேவையான சட்ட விதிகளை இணைத்து புகையிலை மற்றும் மதுவிற்கான தேசிய அதிகாரசபை சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

சிகரெட்டுகளின் விலைகளை நிர்ணயித்த பிறகு அவற்றின் மீது வரி விதிப்பதன் முக்கியத்துவத்தை அதிகாரிகள் வலியுறுத்தினர்.

சிகரெட் விற்பனை மீதான அதீத வரியால் அரசாங்கத்திற்குப் பெருந்தொகை வருவாய் கிட்டுவதாக மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிகரெட் பாவனையால் எழும் தீமைகளுக்கும் மருத்துவ செலவுகளுக்கும் அதிலும் விட பல மடங்கு அரசாங்கம் செலவு செய்து கொண்டிருக்கின்றது என்பது பலருக்கும் புரிவதில்லை.

பக்கெட்டுகளை உடைத்து சிகரெட்டுகளை தனித்தனியாக விற்பனை செய்வதைத் தடை செய்வது குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும், அந்த விஷயம் தற்போது விவாதத்தில் உள்ளது என்றும் குழுவின் தலைவர் டாக்டர் நிஹால் அபேசிங்க தெரிவித்தார்.

எது,எப்படியாயினும் நாட்டில் சிகரெட் பாவனையைக் குறைக்கச் செய்வதற்கான மார்க்கம் - உபாயம் - குறித்துத்திட்டமிடுவது தான் அவசியமானது.





# அட்டாளைச்சேனையில் முதியோருக்கு உதவி!

(நவாஸ்)

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக முதியோர்கள் தங்கள் வீடுகளில் வசிக்கத் தேவையான குறைந்தபட்ச வசதிகள் மற்றும் மலசல கூடங்கள் வழங்கும் செயற்றிட்டம் அட்டாளைச் சேனையில் இடம்பெற்றது.

பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 36 பயனாளிகளுக்கு 90 லட்சம் ரூபா பெறுமதியான கட்டில்கள், மெத்தைகள், கொமட்கள் என்பன அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.ஜெகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸபிர் மற்றும் கணக்காளர் எம்.எப். பர்ஹான், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஜெ.ஜௌபர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் கே.பி.சலீம், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ. எம். ஹமீட், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.ஏ.எம். கைஸ் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# அட்டாளைச்சேனை நிலாமியா பாடசாலையில் வித்தியாரம்பம்

(றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை நிலாமியா ஜுனியர் பாடசாலையின் வித்தியாரம்பம் விழா பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.எப்.எம். நழிம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு ஓய்வு நிலைலுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ. அஹமட் கியாஸ், உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எம். வாஹீட், ஆசிரிய ஆலோசகர் என்.சம்சுடீன், அதிபர் ஜப்பார், உட்பட வலய இணைப்பாளர் எம்.ஐ. ஜாபீர் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டனர்.

பாடசாலையின் அபிவிருத்திக் குழு, மற்றும் பெற்றோர்களின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த வித்தியாரம்ப விழாவில் சிரேஷ்ட மாணவர்களால் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் வரவேற்கப்பட்டனர். மாணவர்களின் கலை, கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றது.







# பாலாவியில் நீராடும் பக்தர்களின் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை

(வாஸ் கூஞ்ஞ)

எதிர்வரும் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பல ஆயிரக் கணக்கான பக்தர்கள் இந்த முறையும் மன்னார் பாடல் தளமான திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு வருகை தந்து பாலாவியில் நீராடுவர் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இருப்பதால் பாலாவியில் நீராடும் பக்தர்களின் பாதுகாப்பும் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பாடல்பெற்ற திருத்தளங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரத் தளத்தில் மகா சிவராத்திரி பெருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயும் முதலாவது கலந்துரையாடல் கூட்டம் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தத் திருத் தலத்துக்கு வருகைதரும் பக்தர்களின் அத்தியாவசிய தேவைகள் தொடர்பாக ஆராயப்பட்டதில் மன்னார் பாலாவி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அதாவது திருக்கேதீஸ்வரம் வரும் பக்தர்கள் சிவராத்திரி தினத்தில் பாலாவியில் தீர்த்தம் ஆடிய பின்னர் அங்கிருந்து நீரைக் கொண்டு வந்து லிங்கத்துக்கு அபிஷேகம் செய்வர்.

இந்த நிலையில் பாலாவியில் தற்பொழுது ஐந்து அடி நீர் இருப்பதாகவும் இதற்குள் முதலைகள் காணப்படுவதாகவும் இதனை தற்பொழுது பிடிக்க முடியாத நிலை இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இவற்றால் நீராடிய பக்தர்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இருந்தும் வன ஜீவராசி திணைக்களமும் கடற்படையினரும் இணைந்து பக்தர்கள் நீராடும் இடங்களில் அவதானிப்புகளில் ஈடுபடுவர் என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.





# அம்பாறை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

## அஷ்ரப் தாஹிர் எம்.பி. தலைமையில்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிர் தலைமையில், அம்பாறை மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று நிந்தவூர் மர்ஹூம் அஸ்ரப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு, அல்ஹிக்மா ஃபவுண்டேஷன் அமைப்பின் அனுசரணையிலும், மாஸ் ஃபவுண்டேஷன் அமைப்பின் ஒருங்கிணைப்பிலும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், கல்வி வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில், பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அல்ஹிக்மா ஃபவுண்டேஷன் அமைப்பின் பிரதிநிதிகள், நிந்தவூர் மாஸ் ஃபவுண்டேஷன் அமைப்பின் தலைவர் உட்பட உறுப்பினர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், கட்சியின் சார்பிலான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# அரசியல் செயற்பாட்டிலுள்ள பெண்களுக்கு எதிராக பரப்பப்படும் அவதூறுகளுக்கு எதிராகக் கண்டனம்!

**மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடந்த ஊடக சந்திப்பில் தெரிவிப்பு**



**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்டத்தில் அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்களுக்கு எதிராகப் போலி முக நூல்களில் முன்னெடுக்கப்படுகின்ற அவதூறு செய்திகளுக்கு வன்மையான கண்டனத்தை தெரிவிப்பதோடு, பொறுப்புள்ள அதிகாரிகள் குறித்த போலி முக நூல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

அரசியல் மற்றும் சமூக செயற்பாடு களில் ஈடுபடும் பெண்களுக்கு எதிராக சமூக ஊடகங்கள் ஊடாக பரப்பப்படும் அவதூறுகளுக்கு எதிராக இன்று வியாழக்கிழமை காலை மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றி யத்தின் தலைவி மகாலட்சுமி குரு சாந்தன் தலைமையில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த ஊடக சந்திப்பில் உள்ளூ ராட்சி மன்றங்களின் பெண் உறுப் பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது கலந்து கொண்டவர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையில்,

அரசியல் மற்றும் சமூக செயற் பாடுகளில் ஈடுபடும் பெண்கள் சமூக மாற்றத்துக்கும் ஜனநாயக வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றுகின்றனர். இருப்பி னும் இன்றைய சமூக ஊடக தளங்களில் அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்கள் மீது மேற்கொள் ளப்படும் அவதூறுகள், இழிவுரைகள் பாலின அடிப்படையிலான தாக்கு தல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் தவறான தகவல் பரப்பல்கள் மிகுந்த கவலையை ஏற்படுத்துகின்றன.

இந்த வகையான சமூக ஊடக தொல்லைகள் பெண்களின் கருத்துச் சுதந்திரத்தை அடக்குவதோடு, அவர்கள் அரசியல், பொதுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் தலைமைப் பொறுப் புகளை ஏற்கும் துணிவையும் தளர்த் துகிறது.

பெண்களை மௌன படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இத் தகைய செயல்கள் ஜனநாயகத்துக்கே பெரும் அச்சுறுத்தலாகும்.

அரசியல் கருத்து வேறுபாடுகள் இயல்பானவை. ஆனால் அவை பெண்களின் பாலினத்தை குறிவைத்து இழிவுபடுத்தும் அவமானப்படுத்தும், மிரட்டும் அல்லது வன்முறையைத் தூ ண்டும் வகையில் வெளிப்படுத்தப்படுவது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாத தாகும்.

குறிப்பாக சமூக ஊடகங்களில் பெண்களின் தனிப்பட்ட வாழ்க்கை, உடல், குணாதிசயம் ஆகியவற்றைக் குறி வைக்கும் தாக்குதல்கள் மனித உரிமை மீறல்களாகும்.

பெண்களுக்குப் பாதுகாப்பான, மரியாதையான மற்றும் சமத்துவமான சமூக ஊடக சூழல் உருவாக்கப்படுவது அரசின் சமூகத்தின் ஊடக நிறுவ னங்களின் மற்றும் சமூக ஊடக நிர் வாகங்களின் பொறுப்பாகும்.

சமூக ஊடகங்களில் நடைபெறும் பாலின அடிப்படையிலான தொல்லைக ளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உடனடி பாதுகாப்பும், நீதியும், உளவள ஆதர வும் வழங்கப்பட வேண்டும்.

மன்னாரில், அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்கள் மீது சமூக ஊடகங்களில் பரப்பப்படும் அனைத்து விதமான அவதூறுகளை யும் மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றி யம் வன்மையாக கண்டிக்கின்றது.

பெண்களின் அரசியல் பங்கேற்பைத் தடுக்கும் எந்தவொரு செயலையும் பொறுப்புள்ள சமூகத்தால் ஏற்றுக் கொள்ள முடியாது.

மேலும் பெண்களின் குரல், உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த இங்கு சமூகமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய அவசியம் உள்ளது சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பெண்கள் அச்சமின்றி தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும், அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளில் சம உரிமையுடன் தலைமைப் பொறுப் புகளில் பங்கேற்கவும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதே எங்களின் உறுதியான நிலைப்பாடாகும்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சி யாக பெண்களுக்கு எதிராகப் போலி முக நூல்களில் முன்னெடுக்கப்படுகின்ற அவதூறு செய்திகளுக்கு நாங்கள் வன்மையான கண்டனத்தை தெரிவிக் கின்றோம்.

பொறுப்புள்ள அதிகாரிகள் குறித்த போலி முக நூல்களுக்கு எதிராகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண் டும்.– என்றனர்.






# வாய்ப் புற்றுநோய் தடுப்பு விழிப்புணர்வு போட்டி வெற்றியாளர்கள் கௌரவிப்பு

(ஏ.அஹமட்)

உலக தலை மற்றும் கழுத்துப் புற்று நோய் தினத்தை முன்னிட்டு பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற் படுத்தும் பொருட்டு, கல்முனை பிராந் திய வாய் சுகாதார பிரிவால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட்டியின் வெற்றியா ளர்களுக்குப் பரிசில்கள் உட்பட சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

குறித்த சுவரொட்டிப் போட்டியின் வெற்றியாளர்களுக்குப் பரிசளிக்கும் நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் நேற்று பிராந்திய பணிமனையில் இடம் பெற்றது.

கல்முனை பிராந்திய வாய் சுகாதார பிரிவினால் ஒருங்கிணைப்பு செய் யப்பட்ட இந்த நிகழ்வில் பிராந்திய கண் காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய வாய் சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் யூ.ஹபீப் முஹம்மட், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தரம் 6 முதல் 9 வரையான ஒரு பிரிவிலும், தரம் 10 முதல் 13 வரையான மற்றுமொரு பிரிவிலும் இந்தப் போட் டிகள் நடத்தப்பட்டன. மாணவர்களின் ஆக்கத்திறன் மற்றும் நோய் குறித்த தெளிவை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு பிரிவிலும் 10 சிறந்த சுவ ரொட்டிகள் நடுவர்களால் தெரிவு செய் யப்பட்டன. இதில் முதல் மூன்று இடங் களைப் பெற்ற மாணவர்களுக்குப் பணிப்பாளரால் விசேட பரிசில்கள் வழங்கப்பட்டன. ஏனையோருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதன்போது, பிராந்திய வாய் சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் யூ. ஹபீப் முஹம்மட், வாய்ப் புற்றுநோயின் ஆரம்ப அறி குறிகள் மற்றும் அவற்றைத் தடுக்கும் முறைகள் குறித்து விளக்கக் காட்சிக ளுடன் விரிவுரை நிகழ்தினார். புற்று நோயை ஆரம்பத்திலேயே கண்ட றிவதன் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டது.

இப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த சுவரொட்டிகளை எதிர்காலத்தில் பொது விழிப்புணர்வு நடவடிக்கைகளுக் காகப்பயன்படுத்தவும்திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பருத்தித்துறை வியாபாரிமூலை வீரபத்திரர் ஆலய கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வியாபாரிமூலை அருள்மிகு பத்திரகாளி யம்பா சமேத ஸ்ரீ ஆதீசிவ வீரபத்திரர் கோயில் புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்ட பட்ச மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 07.45 மணி முதல் 08.50 மணி வரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கர்மாரம்ப கிரியைகள் கடந்த புதன்கிழமை ஆரம்ப மாகி நடைபெற்று வருகின்றன.

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத் தும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 08 மணி முதல் மாலை 05 மணி வரை நடைபெறும். நெல்லியடி தடங்கல் முருகமூர்த்தி ஆலய பிரதம குரு குருகு ஹ துரந்தர் பிரம்மஸ்ரீ றா.ரங்கசாமிக் குருக்கள் பிரதம குருவாக இருந்து ஆலய பிரதம குரு வா.சசிதர சர்மாவின் உதவியுடன் நடத்தி வைப்பார்.



# மலையக பாடசாலைகளில் இன்று இடம்பெற்றன கால்கோள்விழாக்கள்

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

மலையக பாடசாலைகளில் இன்று தரம் 01 இற்கு மாணவர்களை அனுமதிக்கும் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

“மகிழ்ச்சி, புன்னகை, அன்புடன்” எனும் தொனிப்பொருளின் 2026 ஆம் ஆண்டுக்கான முதலாம் தரத்துக்கு மாணவர்களைப் பாடசாலைகளில் அனுமதிக்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் முதலாம் தரத்துக்கு உரிய பாடத்திட்டத்தை இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அதை அடுத்து. மலையக பகுதிகளில் உள்ள பாடசாலைகளிலும் மாணவர்களைத் தரம் 01 இற்கு உள்வாங்கும் நிகழ்வு மிக சிறப்பாக இடம்பெற்றது.

அந்தவகையில் ஹட்டன் கல்வி வலையத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் இல. 01 தமிழ் வித்தியாலயத்தில் இன்று மாணவர்களை தரம் 01 இற்கு அனுமதிக்கும் நிகழ்வு வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.விஸ்வலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஹட்டன் கல்வி வலயத்தின் ஆசிரியர் ஆலோசர் ஏ.சிவவதனசுந்தரம் கலந்து கொண்டார்.

புதிதாக வருகை தந்த மாணவர்கள் பேரணியாக பாடசாலையின் நுழைவாயிலுக்கு அழைத்து வரப்பட்டதோடு தரம் 02 மாணவர்கள் புதிய மாணவர்களை வரவேற்றனர். அதன் பிறகு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. அதிதிகளுக்கு நினைவு பரிசில்கள் வழங்கப்பட்டன.







# நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் இறந்த நிலையில் சிறுத்தை மீட்பு!

(மஸ்கெலியா விசேட நிருபர்)

நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் இறந்த நிலையில் சிறுத்தை ஒன்று இன்று மீட்கப்பட்டுள்ளது.

நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள லக்சபான தோட்ட லக்சபான பிரிவில் இந்த சிறுத்தை மீட்கப்பட்டுள்ளது.

லக்சபான தோட்ட லக்சபான பிரிவில் உள்ள தொழிலாளர்கள் இன்று காலை பணிக்கு சென்ற வேளையில் உயிரிழந்த நிலையில் கருப்பு நிற சிறுத்தை ஒன்று கிடைப்பதை கண்ட தொழிலாளர்கள் தோட்ட முகாமையாளருக்கு அறிவித்தனர்.

முகாமையாளர் இது குறித்து நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் நல்லதண்ணி வனத்துறை அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

உடன் நல்லதண்ணி வனத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று உயிரிழந்த நிலையில் இருந்த கருப்பு நிற சிறுத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ரந்தெனிகல மிருக வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர்.

இந்த சிறுத்தை உயிரிழந்து மூன்று நாள்கள் ஆகிவிட்டது எனவும் உயிரிழந்தமைக்கான காரணம் அ தெரியவில்லை என்றும் நல்லதண்ணி வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கல்முனையில் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு தண்டப்பணம் அறவீடு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகரப் பகுதிகளில் நடமாடிய கட்டாக்காலி மாடுகள் பல, கல்முனை மாநகர சபையால் பிடிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபியின் பணிப்புரைக்கு அமைவாக கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பொதுச் சந்தைகள் மற்றும் பிரதான வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி மாடுகளைக் கைப்பற்றும் நடவடிக்கை கடந்த சில நாள்களாகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட மாடுகளுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் அறவிடப்பட்டன.

இவ்வாறு ஏலவே பிடிபட்ட மாடுகள் மீண்டும் பொது இடங்களில் நடமாடுமாயின் அவை மீண்டும் பிடிக்கப்படும் என்றும் அவற்றின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அரசுடமையாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கல்முனை மாநகர பிரதேசங்களில் பிரதான வீதிகள், பொதுச் சந்தைகள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் பொது மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் பெரும் தொல்லையாக இருப்பதுடன் வாகனப் போக்குவரத்துகளுக்கும் இடையூறாக அமைகின்ற அதேவேளை விபத்துகளும் நிகழ்கின்றன. குறிப்பாக மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகி காயமடைவதுடன் உயிராபத்தையும் எதிர்நோக்கியுள்ளனர்.

அத்துடன் இரவு நேரங்களில் பெரும் எண்ணிக்கையிலான கட்டாக்காலி மாடுகள் கூட்டம் கூட்டமாக நகரை ஆக்கிரமித்து, அசுத்தப்படுத்தி வருகின்றன. இதனால் துர்வாடை வீசுவதால் வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களுக்கு பெரும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, அவற்றைப் பிடித்து உரிமையாளர்களிடம் தண்டப் பணம் அறவிடும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்து என்று கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தெரிவித்தார்.



# 37 வருட கல்விச் சேவையில் இருந்து ஓய்வுபெறும் அதிபருக்கு கௌரவிப்பு

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட தலவாக்கலை பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபராக பணிமாற்றிய நல்லமுத்து விஜயகுமாரன் தனது 37 வருட கல்விச் சேவையிலிருந்து கடந்த வாரம் ஓய்வு பெற்றார்.

இவரைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, தலவாக்கலை பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வு தலவாக்கலை பாரதி தமிழ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, நுவரெலியா கல்வி வலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் கிருபாகரனால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். பாடசாலை ஆசிரியர்களால் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது. அன்றைய தினம் அவருக்கு ஆசி வேண்டி தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

ஆலயத்தில் இருந்து ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களால் பொன்னாடை போர்த்தி வாகன பேரணியுடன் அதிபர் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்த நிகழ்வில் முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய அதிபருமான ஜெகதீஸ்வரன், நுவரெலியா கல்வி வலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் கிருபாகரன், பாடசாலையின் பழைய மாணவரும் தலவாக்கலை லிந்துலை நகர சபை உறுப்பினருமான தாளமுத்து சுதாகரன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், அயற் பாடசாலை அதிபர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.






# கொழும்பு பண்டாரநாயக்க மண்டபத்தில் அக்கரைப்பற்று கம்பஸ் பட்டமளிப்பு விழா

(றிபாஸ்)

அக்கரைப்பற்றில் அமைந்துள்ள ஐ.பி.எச்.எஸ். கம்பஸ் மற்றும் என். ஐ.எஸ். ரி. கல்வி நிறுவனங்களின் வருடாந்த பட்டமளிப்பு விழா கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கம்பஸின் தலைமை நிர்வாக அதிகாரி பொறியியலாளர் என்.ரி ஹமீட் அலி தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பேராதனை பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் துறையின் ஓய்வுநிலைப் பேராசிரியர் எம். அப்துல் கரீம் பிரதம அதிதியாகவும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிர யோக விஞ்ஞான பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், சிரேஷ்ட விரிவுரையா ளருமான கலாநிதி உமர்லெப்பை ஜெய் னுதீன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். மேலும், கல்வி மற்றும் தொழில்துறை சார்ந்த கல்வியாளர்கள், விரிவுரையாளர்கள், நிருவாக அலுவ லர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கிழக்கிலங்கையின் கட்டட நிர்மாணத் துறையின் முன்னணி கல்வி நிறுவனங் களாக தொழிற்படும் ஐ.பி.எச்.எஸ்.மற்றும் என்.ஐ.எஸ்.ரி. கல்லூரிகளில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.






# பல்பண்பாட்டு மனப்பான்மையும் அதனை ஏற்கும் உளவியலும்...!



சஞ்சோபனா அரிச்சந்திரன்,
உளவியல் சிறப்புக்கலை,
யாழ்.பல்கலைக்கழகம்.

பல்பண்பாட்டு மனப்பான்மை என்பது வெவ்வேறு கலாச்சாரங்களில் இருந்து வந்த நபர்களை புரிந்து கொள்வதும், மதிப்பதும், ஏற்கும் மனநிலையில் இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கும். இது ஒரு வரது மதம், மொழி, பாரம்பரியம், பழக்கவழக்கம் போன்றவை மாறுபட்டிருந்தாலும், அவர்களை சம மாய் காணும் எண்ணப்பெறும் தன்மை ஆகும். பல்பண்பாட்டு மனப்பான்மையை வளர்த்துக் கொள் வதன் மூலம் சமூக ஒற்றுமை, கலாசார பரிமாற்றம் மற்றும் மனநல மேம்பாடு ஆகியவை ஏற்படுகின்றன. இது குறிப்பாக கல்வி, மருத்துவம், உளவியல் மற் றும் சமூக சேவைகளில் மிக முக்கியமான ஒரு மனநிலை என்ற வகையில் கருதப்படுகிறது.

### இலங்கையின் பல்பண்பாட்டு சமுதாயங்கள்

இலங்கை என்பது பல்பண்பாட்டு மற்றும் பல்லின சமூக அமைப்பைக் கொண்ட ஒரு தீவுக் குடியரசாகும். இங்கு வாழும் மக்களின் கலாசாரம், மதம், மொழி மற்றும் வாழ்வியல்கள் வெவ்வேறு முறையில் காணப்படுகின்றன.

தமிழர்கள் இலங்கையில் மிக முக்கியமான சமூகக் குழுவாக உள்ளனர். வட மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் அதிகமாக வாழும் இவர்கள், தங்கள் மொழி, பாரம்பரியம், கலை மற்றும் மத அடை யாளங்களை பாதுகாத்து வருகிறார்கள். பெரும்பாலும் இந்துக்கள் மற்றும் சிலர் கிறிஸ்தவர்களாகவும் இருக்கின்றனர். தமது சமய விழாக்கள், இசை மற் றும் நடனங்கள் தமிழ் கலாசாரத்தின் தனித்தன் மையை வெளிப்படுத்துகின்றன. இலங்கையின் பெரும்பாலான மக்களாகவும், அரசின் முக்கியத்துவம் வாய்ந்த சமூகமாகவும் சிங்களர்கள் உள்ளனர். இவர்களின் மொழி சிங்களம், மதம் பெரும்பாலும் புத்தமதமாக உள்ளது. தமது பாரம்பரிய ஆடைகள், பாரம்பரிய உணவுகள் மற்றும் புத்தமதத்தை மைய மாகக் கொண்ட வாழ்க்கைமுறை இவர்களின் கலாச்சாரத்தின் முக்கிய அம்சமாகும்.

கிறிஸ்தவர்கள் இலங்கையில் பல பாகங்களில் காணப்படுவர். இவர்களின் மதநம்பிக்கைகள், திருச் சபை வழிபாடுகள் மற்றும் கிறிஸ்துமஸ் போன்ற விழாக்கள் தனித்துவத்தை காட்டுகின்றன. முஸ்லிம் கள் பெரும்பாலும் முரிஸ், பரேவூர், அக்கரைப்பற்று போன்ற பகுதிகளில் வாழ்கின்றனர். இஸ்லாமிய மரபுகள், உடைமை பழக்கவழக்கங்கள் மற்றும் சமூக ஒற்றுமை இவர்களின் பண்பாட்டின் அடையா ளமாக உள்ளது. இந்த வகையான பல்பண்பாட்டுப் பின்னணியில் ஒற்றுமை மற்றும் பரஸ்பர மரியாதை மிக முக்கியமாகும்.

### பல்பண்பாட்டு சமுதாயங்களில் உருவாகும் சவால்கள்

பல்பண்பாட்டு சமுதாயம் என்பது பல்வேறு மொழி, மதம், இனம், கலாசாரம் மற்றும் சமூகப் பின்னணிகளை கொண்ட மக்களுடன் இணைந்து வாழும் அமைப்பாகும். இது ஒருபுறம் வளமான கலாச்சார பரிமாற்றத்தையும், மறுபுறம் சில சவால் களையும் உருவாக்குகிறது.

1. தொடர்பு சிக்கல்கள்

மொழி வேறுபாடு, கலாச்சார மாறுபாடுகள் காரணமாக ஒருவருக்கொருவர் இடையேயான உரையாடல் சிக்கலாக மாறும். இது தவறான புரித லுக்கும், குழப்பங்களுக்கும் வழிவகுக்கும்.

2. பாகுபாடு மற்றும் முன்னுரிமையின்மை

சில சமுதாயக் குழுக்கள் தங்களை சிறந்தவர் களாகவே நினைத்து மற்றவர்களை புறக்கணிக்கும் நிலை காணப்படும். இது இன, மத, கலாச்சார பாகு பாட்டை வளர்க்கும்.

3. சமூக ஒருங்கிணைப்பு குறைபாடு

பல்வேறு பண்பாட்டை சேர்ந்த மக்கள் ஒரே சூழலில் இணைந்து செயல்பட தவறுவதால் குழு வேலை, கல்வி, வேலை வாய்ப்பு போன்றவைகளில் ஒற்றுமை குறையும்.

4. மத மற்றும் கலாசார மோதல்கள்

மதவாதம், தீவிரவாதம் போன்ற பிரச்சினைகள் சமூக அமைதியை பாதிக்கும். விருப்பம், உணவுப் பழக்கங்கள், உடைமுறை போன்றவற்றில் மாறு பாடுகள் முரண்பாடுகளை ஏற்படுத்தும்.

5. அடையாளம் குறைபாடு

இளைய தலைமுறைகள் தங்களது கலாச்சார அடையாளத்தை இழக்கக்கூடிய சூழ்நிலைகள் உரு வாகும். இது அவர்களது மனநிலை மற்றும் சமூக அடையாளத்தில் குழப்பத்தை உருவாக்கும்.

### பல்பண்பாட்டை ஆதரிக்கும் உளவியல் கொள்கைகள்

பல்பண்பாட்டை ஆதரிக்கும் உளவியல் கொள் கைகள், மாறுபட்ட கலாசார சூழ்நிலைகளை புரிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டவை. Albert Bandura வின் சமூகக் கற்றல் கோட்பாடு (Social Learning Theory) ஒருவரின் கலாசாரப் பின்னணியில் அவர்களது நடத்தை உருவாகும் என்பதை வலியுறுத் துகிறது. Carl Rogers இன் தனிநபர் மையமான அணுகு முறையில் (Person-Centered Approach) ஒவ்வொரு நபரின் அனுபவங்கள் மதிக்கப்பட வேண்டும் என்பதைக் கூறுகிறது. Milton Bennett-ன் Developmental Model of Intercultural Sensitivity (DMIS) மாறுபட்ட பண்பாட்டை ஏற்கும் மனநிலையை வளர்த்தல் பற்றி பேசுகிறது. இவ்வகை உளவியல் கொள்கைகள், பரஸ்பர புரிதல், மரியாதை, ஏற்றுக்கொள்வது போன்ற மனப்பான் மையை வளர்க்கும் நோக்குடன் செயல்படுகின்றன.

### பல்பண்பாட்டை ஏற்கும் உளவியல் முக்கியத்துவம்

பல்பண்பாட்டு மனப்பான்மையை ஏற்கும் உள வியல் அணுகுமுறைகள் சமூக ஒற்றுமையையும் கலாச்சார இடைவெளிகளை மழுங்கடிக்கும் பணி யையும் சிறப்பாக நிறைவேற்றுகின்றன. ஒவ்வொரு மனிதரும் தனித்துவமான கலாசாரப் பின்னணியைக்

தொடர்ச்சி▼

# பல்பண்பாட்டு மனப்பான்மையும் அதனை ஏற்கும் உளவியலும்...!

**தொடர்ச்சி▲**

கொண்டு வாழ்கிறார்கள் என்பதை உணர்வதே இவ்வணுகுமுறையின் மையக் கோட்பாடு. இது ஒருவருக்கொரு பண்பாட்டை எதிர்பாராதவிதமாக விமர்சிக்காமல், புரிந்துகொள்வதற்கான மன நிலையை வளர்க்க உதவுகிறது. அத்துடன், பல்துறைச் சமூகங்களில் உள்ள தன்மைகளை மதித்து, ஒற்றுமையை வலுப்படுத்துகிறது. கல்வி, உளவியல் சேவைகள், வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் பண்பாட்டு உணர்வுள்ள அணுகுமுறைகள் பயனாளிகளை மதிப்புடன் அணுக உதவுகிறது. மேலும், மாணவர்கள், பணியாளர்கள், சமூகத்தினரிடையே பண்பாட்டியல் உணர்வு ஏற்படுவதால், பாகுபாடுகள் குறைந்து, எல்லா சமூகங்களும் ஒரே நிலைமையில் ஒத்துழைக்கத் தூண்டும். எனவே, பல்பண்பாட்டை ஏற்கும் உளவியல் அணுகுமுறைகள், இன Todayயே சமகால உலகில் சமாதானத்திற்கும், பரஸ்பர ஒற்றுமைக்கும் அடிப்படைத் தூணாக அமைக்கின்றன.

### அறிஞர்கள் மற்றும் உளவியலாளர்களின் பார்வை

பல்பண்பாட்டு மனப்பான்மையைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் மற்றும் உளவியலாளர்கள் முக்கியமான பார்வைகளை முன்வைத்துள்ளனர். உளவியலாளர் Geert Hofstede பல்சமூகங்களில் பண்பாட்டு வேறுபாடுகள் எப்படி ஆளும் முறையையும் சமூக உறவுகளையும் பாதிக்கின்றன என்பதை விளக்குகிறார். அவர் “Cultural Dimensions Theory” மூலம் பண்பாட்டு நிலைப்பாடுகளின் தாக்கங்களை ஆய்வு செய்தார்.

Carl Rogers என்ற மனிதநேயம் சார்ந்த உளவியலாளர், தனிப்பட்ட அனுபவங்களை மதித்து ஒவ்வொரு நபரின் பார்வையை புரிந்துகொள்வதே உண்மையான ஒத்துழைப்பை உருவாக்கும் என வலியுறுத்தினார்.

அதேபோல், Vygotsky சமூகப் பரிமாற்றங்களும், கலாச்சார சூழ்நிலைகளும் மனித அறிவுத் திறனில் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறினார். இவர்களின் கருத்துக்கள், பல்பண்பாட்டை ஏற்கும் உளவியல் அணுகுமுறைகளுக்கு அடித்தளமாக விளங்குகின்றன. இவ்வாறாக, அறிஞர்களின் பார்வைகள் பல் பண்பாட்டை ஏற்கும் நம் மனநிலையை விரிவாக்கி, மதிப்புநிலை சூழலை உருவாக்க உதவுகின்றன.

### உளவியல் சேவைகளில் கலாசார நடத்தை எடுத்துக்காட்டுகள்

உளவியல் சேவைகளில் கலாசார நடத்தை புரிந்து கொள்வது மிகவும் முக்கியம். உதாரணமாக, ஒரு தாய்க்கு தன் குழந்தை பற்றிய கவலை வெளிப்படுத்தும் விதம், அவர்களின் பண்பாட்டின்படி மாறுபடலாம். சில சமயங்களில் சில சமூகங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதைத் தவிர்க்கலாம், இது உளவியலாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது. மற்றொரு எடுத்துக்காட்டு, சிகிச்சை முறைகள் கலாசார பாரம்பரியங்களுடன் பொருந்தும் வகையில் மாற்றப்பட வேண்டும். உதாரணமாக, யோகா, தியானம் போன்ற பாரம்பரிய நுட்பங்களை சில கலாசாரங்களில் உளவியல் சிகிச்சையில் இணைப்பது பயனுள்ளதாக இருக்கலாம். மேலும், மொழி மற்றும் தொடர்பு முறைகளில் கவனமிடுதல் முக்கியம். பொதுவாக, கலாசாரத்தை மதித்து, அந்த சமூகத்தின் நம்பிக்கைகள் மற்றும் மரபுகளை கவனிக்கும் போது, உளவியல் சேவைகள் எளிதாக அமையும் மற்றும் மதிப்புக்குரிய விளைவுகளைத் தரும்.

### பல்பண்பாட்டு அணுகுமுறைகளுக்கான பரிந்துரைகள்

பல்பண்பாட்டு சூழலில் வாழும் மக்கள் ஒருவரின் பண்பாட்டுப் பின்னணியை மதிப்பது முக்கியம். பல்பண்பாட்டு அணுகுமுறைகளை வெற்றிகரமாக செயல்படுத்த, முதலில் கலாசார விழிப்புணர்வு வளர்த்தல் அவசியம். கல்வி மற்றும் பயிற்சிகள் மூலம் பல்வேறு பண்பாடுகளை அறிந்து கொள்வது, இடையிலான புரிதலை அதிகரிக்கும்.

இரண்டாவது, திறந்த மனப்பான்மையுடன் அணுகுதல் வேண்டும். ஒருவரின் பண்பாட்டை மதித்து, அதனை மாற்ற முயற்சி செய்யாமல், தனித்துவத்துடன் ஏற்க வேண்டும். உளவியல் சேவைகளில் கலாசாரக் கூறுகளை ஒருங்கிணைத்து, தனிப்பட்ட தேவைகளை கருத்தில் கொண்டு திட்டமிட வேண்டும்.

மூன்றாவது, மொழி மற்றும் தொடர்பு வழிகளில் பல்வேறு கலாசாரங்களுக்கு ஏற்ற முறைகளை பயன்படுத்த வேண்டும். மொழி தடைகள் இருந்தால், மொழிபெயர்ப்பாளர்கள் அல்லது கலாசார மத்தியஸ்தர்களை பயன்படுத்தி இடையூறுகளை குறைக்க வேண்டும்.

பொதுவாக, சமூகநல நிகழ்வுகள், கலாசார கொண்டாட்டங்கள் போன்ற பொது இடங்களில் பல்வேறு பண்பாடுகளை இணைத்தல், ஒருமைப் பாட்டை வளர்க்க உதவும். இவ்வாறு பல்பண்பாட்டு அணுகுமுறைகள் செயல்படுத்தப்படும்போது சமூக அமைதி, பரஸ்பர புரிதல் மற்றும் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

### பல்பண்பாடு தொடர்பான ஆராய்ச்சிகள்

பல்பண்பாட்டு (Multicultural) மனப்பான்மை மற்றும் கலாச்சாரம் தொடர்பான பல ஆராய்ச்சிகள் உலகளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை பண்பாட்டு புரிதல், சமூக இணைப்பு மற்றும் மனநலம் ஆகிய அம்சங்களை ஆராய்ந்து, சமூக அமைதிக்கு உதவுகின்றன.

குறிப்பாக “A Multicountry Perspective on Cultural Competence among Nursing Students” (2016) என்ற இந்த ஆய்வில் 2,163 செவிலிய மாணவர்களில் பண்பாட்டு திறனை மதிப்பீடு செய்தது. பல்வேறு பண்பாட்டு சூழல்களில் வேலை செய்யும் திறனை மேம்படுத்த இது உதவியது.

இதனைவிட “Culture Competence and Mental Health across Different Immigrant and Refugee Groups” (2020, நோர்வே & அமெரிக்கா) எனும் இந்த ஆராய்ச்சி குடிபெயர்ந்தோர் மற்றும் அகதிகள் மனநலத்திலும் பண்பாட்டு பொருத்தமும் உள்ள தொடர்பை ஆய்வு செய்தது.

இதேபோல் “A European Perspective on Intercultural Competence and Prejudice” (2025, ஜெர்மனி, UK, ஹங்கேரி, உக்ரைன்) என்ற இந்த ஆய்வு இண்டர்கல்ச்சரல் பொருத்தம் மற்றும் முன்னுரிமையின்மை குறித்த ஆய்வாக இது சமூக ஒத்துழைப்பில் முக்கிய பங்காற்றியது.

இந்த ஆராய்ச்சிகள் பல்பண்பாட்டு மனப்பான்மையை மேம்படுத்த மற்றும் சமூக அமைதியை நிலைநாட்ட உதவுகின்றன. அவை கல்வி, உளவியல், மற்றும் சமூக சேவைகளில் பயன்படுகின்றன. இதன் மூலம் பல்வேறு பண்பாட்டினருக்கு இடையேயான புரிதலும் சமாதானமும் அதிகரிக்கிறது.



# இந்தியாவின் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் 2027 நிதி ஆண்டின் வளர்ச்சி 7.2 வீதமாக இருக்கும்

2025 - 26 ஆம் நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், இந்திய மக்களவையில் இன்று தாக்கல் செய்தார். 2027 நிதி ஆண்டில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 6.8 வீதம் முதல் 7.2 வீதம் வரை இருக்கும் என்று அதில் கணிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் கூட்டத் தொடரில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக நிதி அமைச்சகம் சார்பில் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படுவது வழக்கம். நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ள பொருளாதார விவகாரங்கள் துறையின் பொருளாதார பிரிவு இந்த ஆய்வறிக்கையை தயாரிக்கும். கடந்த ஆண்டில், இந்திய பொருளாதாரம் எவ்வாறு செயல்பட்டது என்பது குறித்த விரிவான பார்வையை இந்த ஆய்வறிக்கை வழங்கும்.

அந்த அடிப்படையில், 2025 - 26 ஆம் நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று தாக்கல் செய்தார். இதையடுத்துப் பேசிய சபாநாயகர் ஓம் பிர்லா, பொருளாதார ஆய்வறிக்கையின் நகல், அனைத்து உறுப்பினர்களின் வாட்ஸ்அப் எண்ணுக்கு அனுப்பப்படும் என கூறினார்.

பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விவரங்கள்:

உலகப் பொருளாதார நிலைமைகள் நிச்சயமற்றதாகவும் நிலையற்றதாகவும் உள்ளது. என்ற போதிலும், இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார நிலை தொடர்ந்து நேர்மறையாகவே உள்ளது. உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளால் அபாயங்கள் அதிகமாக இருந்தாலும், பல நாடுகளின் பொருளாதாரங்களோடு ஒப்பிடும்போது இந்தியாவின் வளர்ச்சி எதிர்பார்த்ததைவிட சிறப்பாக உள்ளது.

எனவே, 2026-27 நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி 7.4 வீதமாக ஆக இருக்கும் என்றும், 2027-28 நிதி ஆண்டில் இது 6.8வீதம் முதல் 7.2 வீதம் வரை இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டின் வளர்ச்சி 7.4 வீதமாக இருக்கும் என்று ஏற்கனவே கணிக்கப்பட்ட நிலையில், சர்வதேச நாணய நிதியம் 7.3 வீதமாக இருக்கும் என்றும், உலக வங்கி 7.2 வீதமாக இருக்கும் என்றும் கணித்துள்ளன. இது நிதி அமைச்சகத்தின் முந்தைய கணிப்போடு ஒத்துப்போகிறது.

உள்நாட்டுத் தேவையே இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையான உந்துசக்தியாகத் திகழ்கிறது. குறிப்பாக, நகர்ப்புறங்களில் நிலவும் வலுவான நுகர்வோர் தேவை, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்துள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வரிச் சீரமைப்பு நடவடிக்கைகள் நகர்ப்பற நுகர்வில் முன்னேற்றத்துக்கு பங்களித்துள்ளது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிப் பாதை வலுவாக உள்ள போதிலும், உலகளாவிய அதிர்ச்சிகளின் தாக்கம் தாமதமாக வெளிப்படக்கூடும் என்பதால், கொள்கை வகுப்பாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தி.மு.க கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கட்சி பிரிந்துவிடும்

## விஜயதரணி ஆருடம்

தி.மு.க. கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கட்சி பிரிந்துவிடும் என பா.ஜ.கவைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ. விஜயதரணி தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"தி.மு.க. கூட்டணியில் மிகப்பெரிய விரிசல் ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சி தி.மு.கவுக்கு எதிரான மனப்போக்கில் உள்ளது. தி.மு.க. கூட்டணியிலிருந்து காங்கிரஸ் கட்சி பிரிந்துவிடும். காங்கிரஸில் பெருவாரியான நபர்கள், நிர்வாகிகள், பொறுப்பில் இருக்கக்கூடியவர்கள் வேறு கூட்டணிக்கு செல்ல வேண்டுமென, தங்களது விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.

காங்கிரஸ் மேலிடத்தில்கூட, ஒரு சாரார் தி.மு.க. கூட்டணி வேண்டாம் என கூறி வருகின்றனர். ஜனநாயகன் படம் தொடர்பாக தணிக்கைச் சான்றுபெற உரிய ஆவணங்களை சமர்ப்பித்தாலே பிரச்சினைகள் தீர்ந்து விடும்.

சான்று வழங்குவதற்கான சாத்திய கூறுகள் ஏற்படும். எனவே, இப்படம் தொடர்பாக சட்டரீதியான வழிமுறைகளை படக்குழு பின்பற்ற வேண்டும். இதைத்தான் உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் கூறியுள்ளன.

இந்த விவகாரத்தில் பா.ஜ.க. மீது வேண்டுமென்றே பழி சொல்லக்கூடாது. த.வெ.கவை கூட்டணிக்குள் கொண்டு வர பா.ஜ.கவும், அ.தி.முகவும் நெருக்கடி கொடுக்கவில்லை. அதற்கான அவசியமும் இல்லை.

படத்தை வைத்து அரசியல் செய்யக் கூடாது. அப்படி அரசியல் செய்து கொண்டிருந்தால் படம் வெளிவராமல் போய் விடும்." என்று தெரிவித்துள்ளார்.

# பெப்ரவரி. 2இல் விஜய் தலைமையில்
# த.வெ.க 3ஆம் ஆண்டு தொடக்க விழா

த.வெ.க. 3 ஆம் ஆண்டு தொடக்க விழா சென்னையில், எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு நடைபெற இருக்கிறது என அக் கட்சியின் பொதுச்செயலாளர் என். ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தொண்டர்களுக்கு அக்கட்சியின் பொதுச்செயலாளர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழக அரசியல் களத்தில் மக்களுக்கான முதன்மைச் சக்தியாக தமிழக வெற்றிக் கழகம் திகழ்கிறது. த.வெ.கவை விஜய் ஆரம்பித்து, இரண்டு ஆண்டுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. தற்போது மூன்றாம் ஆண்டு தொடங்குகிறது.

இந்த இரண்டு ஆண்டுகளாக தமிழக மக்களுக்கான விஜய்யின் முன்னெடுப்புகள் மிக முக்கியமானவை. ஆனாலும் நாம் கடந்து வந்த பாதை எவ்வளவு கடினமானது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். தன் மீது பேரன்பு கொண்ட மக்களுக்காக, அவர் அத்தனைத் தடைகளையும் எதிர்கொண்டு இன்னும் தீவிரமாகக் களமாடி வருகிறார்.

நம் தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் இலக்கை நோக்கிய வெற்றிப் பயணத்தில் மேலும் அதிக ஈடுபாட்டுடன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த இனிய தருணத்தைக் கொண்டாட உள்ளோம். விஜய் தலைமையில் தமிழக வெற்றிக் கழக மூன்றாம் ஆண்டு தொடக்க விழா, சென்னையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சி, கட்சியின் தலைமை நிலையச் செயலகத்தில், எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு நடைபெறுகிறது.

மக்களுக்காக உழைத்து, மக்களுடன் மக்களாக இணைந்து நிற்போம். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் மக்கள் விரோத ஆட்சியைத் தூக்கி எறிவோம். மாபெரும் வெற்றி பெற்று, நம் தலைவர் தலைமையில் மனசாட்சி உள்ள மக்களாட்சியை அமைக்க உறுதி ஏற்போம்." என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



# வடமேற்கு பாகிஸ்தானில் இருந்து 70,000 பொதுமக்கள் வெளியேற்றம்







வடமேற்கு பாகிஸ்தானில் இருந்து 70,000 பொதுமக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் உள்ள கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் தெஹ்ரிக்-இ-தலிபான் பாகிஸ்தான் (டி.டி.பி) என்ற தீவிரவாத அமைப்பு செயல்படுகிறது.

ஆப்கானிஸ்தான் தலிபான்களுடன் தொடர்பு வைத்திருப்பதாகக் கருதப்படும் டி.டி.பி, பாகிஸ்தான் அரசுக்கு எதிராக செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், மீண்டும் டி.டி.பி. அமைப்பினர் மீது இராணுவம் தாக்குதல் நடத்தப்போவதாகவும், ஜனவரி 23 இற்குள் திரா பகுதியை விட்டு வெளியேறுமாறும் மசூதி ஒலிபெருக்கிகள் மூலம் ஒரு மாதம் முன்பே அறிவிப்பு வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 70,000 இற்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் என தகவல் வெளியாகி உள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர்.

இதுகுறித்து பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா முகமது ஆசிப் கூறும்போது,

“திரா நகரில் எந்த ராணுவ நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை. மாறாக அங்கு நிலவும் கடும் குளிரே மக்களின் இடப்பெயர்ச்சிக்குக் காரணம்.” என்றார்.

# மியன்மார் மாபியா கும்பலுக்கு சீனாவில் மரண தண்டனை



மியன்மாரின் எல்லை நகரமான லாவ்க்காங்கில் பாரிய மோசடி மையங்களை நடத்தி வந்த பிரபல மிங் குடும்பத்தைச் சேர்ந்த 11 பேருக்கு சீனா மரண தண்டனை நிறைவேற்றியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மிங் குடும்பத்தினரின் மோசடி மற்றும் சூதாட்ட விடுதிகள் 2015 முதல் 2023 வரையான காலப்பகுதியில் சுமார் 10 பில்லியன் யுவான் (1.4 பில்லியன் டொலர்) வருமானத்தை ஈட்டியுள்ளதாகச் சீனாவின் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கொலை, சட்டவிரோதக் காவலில் வைத்திருத்தல், மோசடி மற்றும் சூதாட்ட விடுதிகளை நடத்துதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இவர்களின் செயற்பாடுகளால் 14 சீனப் பிரஜைகள் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

மியன்மாரின் இந்த மோசடி மையங்களில் ஆயிரக்கணக்கான சீனத் தொழிலாளர்கள் சிறைபிடிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் வெளிநாட்டவர்களை ஏமாற்றும் மோசடி வேலைகளில் கட்டாயப்படுத்தி ஈடுபடுத்தப்பட்டனர்.

2023 ஆம் ஆண்டில் மியன்மாரில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது, லாவ்க்காங் நகரைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த இனக்குழு ஆயுதப் படையினர், இந்தக் கும்பலைப் பிடித்துச் சீன அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

மியன்மார் இராணுவ அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்கி வந்த இந்த மோசடி மாபியா கும்பல்களுக்கு எதிராகச் சீனா எடுத்த மிகக் கடுமையான நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.

கடந்த நவம்பர் மாதம் இந்தக் கும்பல் தாக்கல் செய்த மேன்முறையீட்டை நீதிமன்றம் நிராகரித்த நிலையில், தற்போது இந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கனடா முரசு


பக்கங்கள் - 03

வியாழக்கிழமை 29/01/2026

## வட்டி வீதத்தில் மாற்றம் இல்லை: கனடா மத்திய வங்கி அறிவிப்பு




C2▸




# கனடாவில் கார் உற்பத்தியைத் தொடங்க கனடா - தென் கொரியா பேச்சுவார்த்தை

கனடாவில் வாகன உற்பத்தியை கொண்டு வருவது குறித்து கனடா மத்திய அரசு மற்றும் தென் கொரியா குடியரசு இடையே பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக இரு நாடுகளும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் சட்டபூர்வமான கட்டுப்பாடு இல்லாதது. 'எதிர்கால இயக்கத் தொழில்நுட்பம்' குறித்த தொழில்துறை ஒத்துழைப்பை அதிகரிப்பதே இதன் நோக்கம். இதில் கார் தொழில்துறையைப் பற்றிய பேச்சுவார்த்தைகளும் இடம்பெறுகின்றன.

C2▸

# ஒன்டாரியோ மாகாணத்தில் 50 வாகனங்கள் மோதி விபத்து

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில், டொராண்டோ நகரின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஹைவே 401 வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை சுமார் 50 வாகனங்கள் தொடர்புடைய தொடர் விபத்துகள் ஏற்பட்டன என ஒன்டாரியோ மாகாண பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, இரு திசைகளிலும் போக்குவரத்து பல மணி நேரங்கள் முழுமையாக நிறுத்தப்பட்டது.

C2▸






# வட்டி வீதத்தில் மாற்றம் இல்லை: கனடா மத்திய வங்கி அறிவிப்பு

கனடா மத்திய வங்கி தனது அடிப்படை வட்டி விகிதத்தை 2.25 சதவீதமாக மாற்றமின்றி வைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இது இந்த ஆண்டிற்கான மத்திய வங்கியின் முதல் வட்டி விகிதத் தீர்மானமாகும்.

அமெரிக்க சுங்க வரி நடவடிக்கைகளால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து கனடா பொருளாதாரம் மெதுவாக மீளும் எனவும் மத்திய வங்கி கணித்துள்ளது.

இந்த வட்டி விகிதத்தை நிலை நிறுத்தும் முடிவு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவே இருந்ததாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்தனர்.

கடந்த டிசம்பரில் வட்டி குறைப்பு சுழற்சியை இடைநிறுத்தியதிலிருந்து கனடா பொருளாதாரம் மத்திய வங்கியின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவே முன்னேறி வருவதாக மத்திய வங்கி ஆளுநர் டிஃப் மேக்லெம் கூறினார்.

அதே நேரத்தில், அரசியல் – புவியியல் அபாயங்கள் மற்றும் கனடா – அமெரிக்கா – மெக்சிகோ வர்த்தக ஒப்பந்தத்தின் வரவிருக்கும் மறுஆய்வு காரணமாக, நிலைமைகள் குறித்து உள்ள நிச்சயமற்றத்தன்மை அசாதாரணமாக அதிகம் எனவும் அவர் எச்சரித்தார்.

தற்போதைய சுங்க வரிகள் மற்றும் தொடரும் நிச்சயமற்ற சூழ்நிலைக்கு கனடா பொருளாதாரம் எவ்வாறு தன்னைச் சீரமைத்துக்கொள்ளும் என்பதை மதிப்பிடுவதற்கு இன்னும் நேரம் தேவை என மேக்லெம் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் ஆளுநர் குழு தற்போதைய பொருளாதார முன்னறிவிப்புகளின் அடிப்படையில் இந்த வட்டி விகிதம் "சரியான நிலையில் உள்ளது" எனக் கருதுவதாகவும், ஆனால் அடுத்த வட்டி மாற்றம் எப்போது அல்லது எந்த திசையில் நடைபெறும் என்பதை கணிக்க மிகவும் கடினம் எனவும் அவர் கூறினார்.

இந்த வட்டி விகித முடிவுடன் இணைந்து, கனடா மத்திய வங்கி புதுப்பிக்கப்பட்ட பொருளாதார மற்றும் பணவீக்க முன்னறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளது.

---

**ஒன்டாரியோ...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்துகளில் உயிருக்கு ஆபத்தான அல்லது கடுமையான காயங்கள் ஏற்பட்டதாக எந்த அறிகுறியும் இல்லை என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இருப்பினும், சிலர் சிறிய காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை இரவு வெளியிடப்பட்ட தகவலின்படி, க்விண்டே வெஸ்ட் பகுதியில் கிழக்கு நோக்கிச் செல்லும் பாதை, நாள் முழுவதும் மூடப்பட்டிருந்த நிலையில், இறுதியாக மீண்டும் திறக்கப்பட்டது.

அதற்கு முன்பாகவே, மேற்கு நோக்கிச் செல்லும் பாதையும் மீண்டும் திறக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துகள் காரணமாக வீதியில் சிக்கித் தவித்த சாரதிகளுக்கு அவசர மாற்றுப் பாதைகள் செயல்படுத்தப்பட்டதுடன், டிரென்டன் அரங்கில் தற்காலிக வெப்ப மையம் அமைக்கப்பட்டது.

அவசர சேவை குழுக்கள் வீதியில் நின்றிருந்த வாகனங்களைச் சோதனை செய்து உதவிகளை வழங்கினர்.

---

**கனடாவில் கார்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கனடாவின் தொழில்துறை அமைச்சர் மெலனி ஜோலி மற்றும் தென் கொரியாவின் தொழில் அமைச்சர் ஜங்-கான் கிம், செவ்வாய்க்கிழமை ஒட்டாவாவில் சந்தித்தபோது கையெழுத்திட்டுள்ளனர்.

தென் கொரிய பிரதிநிதிகள் குழுவில் ஹுண்டாய் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் கனடாவின் அடுத்த தலைமுறை நீர்மூழ்கிக் கப்பல்களை வழங்க போட்டியிடும் ஹான்வா ஓஷன் நிறுவனமும் இடம்பெற்றிருந்தது.

இந்த பேச்சுவார்த்தைகள் இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளன. கனடாவில் வாகனங்கள், வாகன உதிரிபாகங்கள் மற்றும் பேட்டரிகளை உற்பத்தி செய்யும் சாத்தியங்கள் இதில் பேசப்பட்டு வருகின்றன. இந்த விவாதங்களுக்கு பின்னணி காரணமாக, கனடாவின் பழைய நீர்மூழ்கிக் கப்பல் படையை மாற்றும் ஒப்பந்தத்தை வெல்ல தென் கொரியா மேற்கொள்ளும் முயற்சிகள் உள்ளன.

ஹுண்டாய் மற்றும் ஹான்வா அதிகாரிகள் டொராண்டோவில் நடைபெற்ற கனடா – கொரியா கார் தொழில் மன்றத்தில் பங்கேற்றனர். அந்த நிகழ்வில், பல கனடிய கார் தொழில் நிர்வாகிகள், ஹுண்டாய் நிறுவனம் தனது சில உற்பத்தி நடவடிக்கைகளை கனடாவுக்கு மாற்ற வேண்டும் என்று முன்மொழிந்துள்ளனர்.



# சிறுவன் மீது கொதிநீர் ஊற்றிய பெண்ணுக்கு சிறைத்தண்டனை

கனடாவின் கியூபெக் மாகாணத்தில், வீட்டு அழைப்பு மணியை அழுத்திச் செல்லும் விளையாட்டு செயலால் ஆத்திரமடைந்து, 10 வயது சிறுவன் மீது கொதிநீரை ஊற்றிய பெண்ணுக்கு 27 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஸ்டெஃபனி போரல் என்பவர், கடந்த செப்டம்பரில் கடுமையான தாக்குதல் குற்றச்சாட்டில் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

குழந்தைகள் தொடர்ந்து வீட்டு அழைப்பு மணியை அழுத்தி அடித்து தொந்தரவு செய்ததால் ஏற்பட்ட ஏமாற்றம் மற்றும் கோபமே இந்தச் செயலில் ஈடுபட காரணமாகியதாக அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வழக்கில் அரசுத் தரப்பும் பாதுகாப்புத் தரப்பும் இணைந்து முன்வைத்த பரிந்துரையை, கியூபெக் நீதிமன்ற நீதிபதி மார்க் அன்டோயின் காரெட் ஏற்றுக் கொண்டு தண்டனை வழங்கினார். கடந்த ஆண்டு ஒக்டோபரில் பிணை ரத்து செய்யப்பட்டதிலிருந்து போரல் காவலில் இருந்து வருகிறார்.

இதனால், தற்போது விதிக்கப்பட்ட தண்டனைக் காலத்தில் இருந்து இன்னும் 20 மாதங்கள் அவர் சிறையில் அனுபவிக்க வேண்டியுள்ளது.

இந்த சம்பவம் 2024 ஒக்டோபர் 2 அன்று நடைபெற்றது.

வெளியீட்டு தடை காரணமாக அடையாளம் வெளியிடப்படாத அந்த சிறுவன், முகம், மார்பு மற்றும் தோள்பட்டை பகுதிகளில் உட்பட, உடலின் சுமார் 4 சதவீதம் அளவில் கடுமையான தீக் காயங்களை சந்தித்துள்ளார்.

சிறுவனின் குடும்பத்தினர் எழுதிய கடிதம் ஒன்றை அரசுத் தரப்பு நீதிமன்றத்தில் வாசித்தது. அதில், இந்த சம்பவத்திற்குப் பிறகு குடும்பம் நிரந்தரமான பய உணர்வுடன் வாழ்ந்து வருவதாகவும், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக ஒரு வலுவான செய்தியை சமூகத்திற்கு தெரிவிக்கும் வகையில் சிறைத் தண்டனை வழங்க வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஒட்டாவாவில் உடைகளைத் திருடிய பெண்ணுக்கு எதிராக வழக்குப்பதிவு




ஒட்டாவாவின் பேஷோர் ஷாப்பிங் சென்டரில் கடந்த வாரம் நடைபெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக, பிராம்ப்டனைச் சேர்ந்த 49 வயது பெண்ணுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என ஒட்டாவா பொலிஸ் தெரிவித்துள்ளது.

ஜனவரி 20 அன்று மாலை 5.30 மணியளவில், மேற்கு ஒட்டாவாவில் அமைந்துள்ள அந்த வணிக வளாகத்தில் உள்ள ஒரு ஆடைக் கடையில் திருட்டு நடைபெற்று வருவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் அங்கு சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்திற்குப் பிறகு, சந்தேகநபரின் வாகனம் அந்த இடத்திலிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கார்லிங் அவென்யூ பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த வாகனத்திலும், சந்தேகநபர் தங்கியிருந்த இடத்திலும் தேடுதல் உத்தரவு அமுல்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, திருடப்பட்ட பெரிய அளவிலான பொருள்கள் மீட்கப்பட்டன என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த பெண்ணுக்கு 5,000 டொலருக்கு கீழான திருட்டு தொடர்பாக இரண்டு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த குற்றச்சாட்டுகள், சமீபத்திய இந்த சம்பவத்துடன் மட்டுமல்லாமல், 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பதிவான உயர்மதிப்புள்ள பல திருட்டுச் சம்பவங்களுடனும் தொடர்புடையவை என ஒட்டாவா பொலிஸ் மேலும் தெரிவித்துள்ளது.